[1973 மார்ச் 19

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்த ரெகுலேட்டட் மார்க்கெட்டை எல்லா மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்க சட்டமே கொண்டு வந்திருக்கலாம். அதை விரைவில் அரசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, நேற்று முன் தினம் நான் சொன்னேன், எல்லா மாவட்டங்களிலேயும் அவை ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன. சேலம் மாவட்டத்தில் இந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருக் கிறது. ஏறக்குறைய 150 திட்டம் தயாரிக்கப்பட்டு, 120 ஆரம்பிக்கப்பட்டு விட்டது.

பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் சீசன் டிக்கட்டுகள்

* 427 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் சீசன் டிக்கட்டுகள் வழங்கும் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆம்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, இப்படி சீசன் டிக்கட் கொடுப் பதன் மூலம் போக்குவரத்துக் கழகத்திற்கு நட்டம் ஏற்படுமா ? அப்படி நட்டம் ஏற்படுமானால் பொதுவாக, இந்தப் பெரு நகரங்களில் நடத்தப்படுகின்ற போக்குவரத்தினால் ஏற்படுகின்ற நட்டங்களைச் சீர்படுத்துவதற்கு மத்திய அரசு உதவி கொடுத்து வருகின்றது. டெல்லியிலே கடந்த இரண்டு ஆண்டுகளில், ரூ. 4 கோடி டெல்லி போக்குவரத்துக் கழகத்திற்கு மத்திய அரசு கொடுத்ததாகப் பத்திரிகைகளிலேயிருந்து அறிந்து கொண்டோம். அதைப் போல் தமிழ் நாட்டின் தலைநகரமாகிய சென்னைக்கு டெல்லிப் பேரரசு உதவி கொடுத்திருக்கிறதா ? மாநில அரசு டெல்லி அரசைக் கேட்டிருக்கிறதா என்ற விளக்கத்தை அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை, பயணிகளுக்கு நன்மை செய்யும் பொருட்டு இந்த சீசன் டிக்கட்டுகள் வழங்கப்படுகின்றன. இதை முதலிலே, 60 டிரிப்புக்கு 20 நாள் என்று கணக்கிட்டு, அவர்களுக்கு சீசன் டிக்கட்டுகள் வழங்கப்படு கின்றன. இதனால் ஓரளவு நஷ்டம் ஏற்படும் என்பது உண்மைதான். இருந்தாலும், பயணிகளின் நன்மையைக் கருதித்தான் மாநகரங்களில் போக்கு வரத்தை நாம் நடத்த வேண்டியிருக்கிறது. மெட்ரோப்பாலிட்டன் சிட்டீஸ், மாநகரங்கள் என்ற வகையில், அவைகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்று

1973 மார்ச் 19]

பிரதம அமைச்சர் அவர்கள் ஒரு குழுவை 1970-ம் ஆண்டு செப்டம்பரிலே நியமித்தார்கள், அந்தக் குழு சில பரிந்துரைகளைச் செய்திருக்கிறது. மெட்ரோப்பாலிட்டன் டிரான்ஸ்போர்ட்டுக்கு உதவி செய்ய வேண்டுமென்று அக்குழு கூறியிருக்கிறது. அந்தப் பரிந்துரைகள் இன்னும் டெல்லி அரசாங்கத்தின் ஆய்விலே இருக்கின்றன.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, சீசன் டிக்கட்டின் மூலம் வருகிற வருமானம் இப்பொழுது குறைந்திருப்பதாகவும், அதற்குக் காரணம், பலர் ஓசியிலே பயணம் செய்வதாகவும் செய்திகள் வருகின்றன. இப்பொழுது ரெயிலிலே ஓசியிலே பயணம் செய்தால் தண்டனை விதிப்பதைப் போல, பஸ்ஸிலே ஓசியிலே பயணம் செய்தால் தண்டனை அளிக்க அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாதம் ஒன்றுக்குக் கிட்டத்தட்ட 7,000 சீசன் டிக்கட்டுகள் விற்பனையாகின்றன. ஆனால் இப்பொழுது பிப்ரவரியிலே 6,800 என்கின்ற அளவிலேதான் வந்திருக்கிறது. ஆகையினாலே, ஓசியிலே பயணம் செய்கிறார்கள் என்று சொல்வது பொருத்தமானது அல்ல.

இருந்தாலும், ஓசியிலே பயணம் செய்கின்றவர்களைத் தடுக்க வேண்டுமென்ற வகையில், மோட்டார் வாகன விதிகளைத் திருத்தி, இனி டிக்கட் இல்லாமல் பயணம் செய்வார்களானால், இரண்டு ரூபாயோ, அல்லது பஸ் புறப்பட்ட இடத்திலேயிருந்து வருகின்ற கட்டணமோ, எது அதிகமோ அது வசூலிக்கப்படும் என்று விதிகள் திருத்தப்படுகின்றன.

சென்னை-வடபுறம் பாக்கம் வழித்தடம்

* 428. வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா— மு 10

(அ) வழித்தடம் எண் 48-பி பேருந்துக்களை வடபுறம் பாக்கத்திலிருந்து விளங்காடு பாக்கம் வரை நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது முதல் அமுல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(இ) இவ் வினாவுக்கு இடமில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS